மாகாணக்கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

நிலையறி பரீட்சை – 2021
நிகழ்நிலையாகவும் மென்பிரதியாகவும்

தமிழ்மொழியும் இலக்கியமும் தரம் 10	22 | T | I	ஒரு மணித்தியாலம்

கவனிக்க:

(1) **எல்லாவினாக்களுக்கும் விடைஎழுதுக.**

(2) **1 தொடக்கம் 40 வரையானவினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டவிடைகளில் சரியானஅல்லதுமிகப் பொருத்தமானவிடையைத் தெரிவுசெய்க**

தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1.“கோவே இராசகுல திலகா.” இங்கு **குல** என்பதன் பொருள்

(1)பரம்பரை (2) கூட்டம் (3) மரபு (4) இனம்

2.“அங்கவை நண்ணுறப் பெறல் திண்ணம்” இங்கு **நண்ணுதல்** என்பதன் ஒத்தசொல்

(1)விரும்புதல் (2)சேர்தல் (3)வெறுத்தல் (4)அடைதல்

3. “நாவலர் அவர்கள் அவதானிக்கிறார் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.” இங்கு **ஞாபகம்** என்பதன் எதிர்ச்சொல்

(1)மறதி (2)நினைவு (3)அசாத்தியம் (4)குழப்பம்

4.“மகிழ்ச்சியில் என் கண்ணில் நீர் ததும்பி நின்றது”. இங்கு **மகிழ்ச்சி** என்பதன் எதிர்ச்சொல்

(1)சோம்பல் (2)துக்கம் (3)சோர்வு (4)வாட்டம்

5.“உற்றிடு பாம்பெள்ளெனவே ஓது”. இங்கு **உற்றிடு** என்ற சொல் தரும் பொருள்

(1)அடைந்திடும் (2)ஏற்றிடும் (3)ஒத்திடும் (4)பார்த்திடும்

பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

6.486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார். இங்கு **பரணி** என்பது

(1)பேரிலக்கியம் (2)சிற்றிலக்கியம் (3)பெருங்காப்பியம் (4)சிறுகாப்பியம்

www.lkedu.lk

7.பின்வருவனவற்றில் தொடர்பற்ற சொற்களின் இணைப்பு

(1) பிரசண்டம் - புயல் (2)விவேகி - மேதை

(3) வேறுவியாசம் –போலிக்காரணம் (4)அங்கவஸ்திரம் - ஆவாகனம்

8.புவனம் மூன்றும் வலஞ் செய்யும் நாடு இங்கு புவனம் மூன்று என்பன

(1) மேல், கீழ், இடை (3)வேர், மரம், பயன்

(2) பிறப்பு, வாழ்வு, இறப்பு (4)நித்தியம், நைமித்தியம், காமியம்

9.சுவர்க்கம், அமராபதி, மோட்சம் என்னும் சொற்கள் குறிக்கும் பொருள்

(1) முக்தி (2)நடுநிலை (3) பாதை (4)வீடுபேறு

10.மௌஸ், மௌஸ் பாட், டிஸ்குகள், பேப்பர் என்று ஊருப்பட்ட சாமான்கள். இங்கு டிஸ்கு (Disk) என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் சொல்

(1)மென்பொருள் (2)இறுவெட்டு (3)வருடி (4)சுட்டி

11.பிள்ளை என்ற இளமை மரபுப் பெயருக்குப் பொருத்தமற்றது

(1) கிளி (2)தென்னை (3) குருவி (4) கீரி

12.போரிலே இறந்தவீரன் பொருட்டு நடப்படுவது

(1)நடுகல் (2)உரைகல் (3) கல்வெட்டு (4)மெய்க்கீர்த்தி

13.பிற்காலத் தேவைகளுக்காக சேர்த்து வைக்கப்படும் செல்வம்

(1) ஏகபோகம் (2)எய்ப்பில் வைப்பு (3)நிந்தகம் (4)சங்கநிதி

14.அது அசையவில்லை குழையடிப்பது ஒன்று தான் பாக்கி. இங்கு குழையடித்தல் என்ற மரபுத்தொடர் தரும் பொருள்

(1) குளிர்மைப்படுத்தல் (2) அருட்டுதல்

(3) ஞாபகப்படுத்தல் (4) தட்டிக்கொடுத்தல்

15.பொய்மையின் கேடு என்ற கருத்தை உணர்த்தும் பழமொழி

(1) அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்

(2) உருட்டும் புரட்டும் சிரட்டையும் கையும்

(3) அலைமோதும் போதேதலை முழுகு

(4) இரக்கப்போனாலும் சிறக்கப் போ

www.lkedu.lk

16.கெடு குடி சொற்கேளாது என்ற பழமொழியின் கருத்து

(1) தீய வழியை விரும்புபவர் நற்புத்தி கேளார்

(2) சிறு வயதில் திருந்தாதவர் பெரியவராகியும் திருந்தார்

(3) கெட்ட குடிமக்கள் திருந்தமாட்டார்

(4)சொற்களை குடிமக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்

17.ஒருவரது செயற்பாடுகளை எப்பொழுதும் அவதானிக்க வேண்டும் என்பதற்குப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்

(1) வைத்தகண் வாங்காமல் பார்ப்பது

(2) வழிமேல் விழிவைத்து

(3) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்

(4) ஊனுறக்கமின்றி

18.(அ) நேற்றுமுழுவதும் நல்லமழைபெய்தது

(ஆ)கிணறுகள் அனைத்தும் நிரம்பிவிட்டன

மேற்படி இரு வாக்கியங்களையும் இணைப்பதற்கு மிகப்பொருத்தமான இணைப்பிடைச் சொல்

(1) எனினும் (2) அல்லது (3) ஆகையினால் (4) இருப்பினும்

19.கம்பியூட்டர் முந்திப்பிந்தி வாங்கியும் அனுபவமில்லை. இங்கு முந்திப்பிந்தி என்பது

(1) இரட்டைக் கிளவி (2) இணைமொழி

(3) அடுக்குத்தொடர் (4) அடுக்கிடுக்குத்தொடர்

20.ஆத்திரத்தோடு நண்பர் அவுக்கென எழும்பி இரண்டில் ஒன்று பார்ப்பதென்று பாய்ந்து வந்தார். இங்கு 'அவுக்' என்ற ஒலிக்குறிப்புச் சொல் உணர்த்துவது

(1) விரைவு (2) வெளிப்படை (3) உற்சாகம் (4) கோபம்

21.ககரம்g என்ற ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிப்பது

(1) கப்பல் (2) தேகம் (3) தீங்கு (4) சுகம்

22.குறவனும் குரங்கும் சென்றனர் என்பது

(1) திணைவழுவமைதி (2) பால் வழுவமைதி

(3) எண்வழுவமைதி (4)இடவழுவமைதி

23.சித்திரித்தான் என்ற சொல்லின் பகுதி

(1)சித்தம் (2)சித்திரி (3)சித்திரித்தல் (4)சித்திரம்

www.ikeou.lk

24.நன்னிலம் என்பதைப் பிரித்தெழுதினால்

(1) நல்ல +நிலம் (2) நல் +நிலம்

(3) நன்மை +நிலம் (4) நால் +நிலம

25.“புலன்களோடு கரணமும் ஆவியும்” இங்கு இடம்பெறும் வேற்றுமை

(1) இரண்டாம் வேற்றுமை (2) மூன்றாம் வேற்றுமை

(3) நான்காம் வேற்றுமை (4) ஐந்தாம் வேற்றுமை

26.“பண்டே பழகியிருந்தாலும் அறியார் புல்லர் நல்லோரை” இங்கு இடம்பெறும் எழுவாய் யாது?

(1) பண்டு (2) அறியார் (3) புல்லர் (4) நல்லோர்

27.வனப்பு மிக்க கவிதைகளைப் பாடுகின்ற புலவர்களுடைய மனமாகிய வானத்திலே ஏறிக்கொண்டு. இங்கு இடம்பெறும் அணி

(1) உவமைஅணி (2) உருவகஅணி

(3) உயர்வுநவிற்சிஅணி (4) தற்குறிப்பேற்றஅணி

28.மிக்காரைச்சேர்தல் மிக மாணமுன் இனிதே. இங்கு இடம் பெற்ற மாண் என்பது எவ்வகைச்சொல்

(1) பெயர் அடிச்சொல் (2) வினை அடிச்சொல்

(3) இடை அடிச்சொல் (4) உரி அடிச்சொல்

29.மிகப் பயங்கரமாகப் பிளிறின. பிளிறின என்பது

(1) பெயர்த்தொடர் (2) வினைத்தொடர்

(3) இடைத்தொடர் (4) உரித்தொடர்

- **பொருத்தமான உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்தொகுதியைத் தெரிவுசெய்க**

30.(1) செயப்படுபொருள் குன்றிய வினை : நட,வா, இரு

(2) செயப்படுபொருள் குன்றாத வினை : உண்,படி, பாடு

(3) தன்வினை : உண்டான், பாடினான், கட்டினான்

(4) பிறவினை : கட்டப்பட்டது, கொல்லப்பட்டது, எழுதப்பட்டது

31.(1) ஆக்கப்பெயர் : முதலாளி, பெண்ணியம், கல்வி

(2) கூட்டுப்பெயர் : வானொலி, கடற்கரை, தொலைக்காட்சி

(3) கூட்டுவினை : எழுதுகோல், கண்டுபிடி, முன்னேறு

(4) தொழிற்பெயர் : பொறியியல், தையல், ஆடுதல்

www.lkedu.lk

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

32.இடர் காலத்தில் மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைப் போக்குவதற்கு அரசாங்கத்தால் ..... வழங்கப்பட்டது .

(1) உதவித்தொகை (2) ஊக்குவிப்புத்தொகை

(3) அன்பளிப்புத்தொகை (4) மானியத்தொகை

33. .....எடுக்க நிற்பது போல் ஆவலோடு நின்றாள் என் மனைவி

(1) ஆராத்தி (2) ஆலாத்தி (3) ஆலத்தி (4)ஆரத்தி

34.விலை நிர்ணயங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசால் புதிய..... அறிவித்தல் வெளியிடப்பட்டது

(1) வர்த்தமானி (2) வெள்ளையறிக்கை

(3) சுற்றுநிருபம் (4)அறிக்கை

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க**

35.நீயோ அவனோ நானோ யார் இதைச்

(1) செய்தாய் (2) செய்தது (3) செய்தீர் (4)செய்தார்

36.பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிபர் பெற்றோருடன்

(1) கருத்துரைத்தார் (2) கலந்துரையாடினார்

(3) அறிவுரை கூறினார் (4) விழிப்புணர்வைச் செய்தார்

பின்வரும் பாடலை அடிப்படையாகக் கொண்டு அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

காடு களைந்தோம் - நல்ல
களனி திருத்தியும் உழவுபுரிந்தும்
நாடுகள் செய்தோம் - அங்கு
நாற்றிசை வீதிகள் தோற்றவும் செய்தோம்
வீடுகள் கண்டோம் - அங்கு
வேண்டிய பண்டங்கள் ஈண்டிடச் செய்தோம்
பாடுகள் பட்டோம் - புவி
பதமுறவே நாங்கள் நிதமும் உழைத்தோம்

37.இப்பாடல் யாருடைய குரலாக ஒலிக்கின்றது

(1) உழவர்கள் (2) தொழிலாளர்கள்

(3) விவசாயிகள் (4)மீனவர்கள்

www.lkedu.lk

38.நாற்றிசை என்பதைப் பிரித்தெழுதினால்

(1) நான்கு + திசை (2) நால் + திசை

(3) நா +திசை (4) நல்ல + திசை

39.இங்கு களனி என்பது குறிக்கும் பொருள் யாது

(1) நிலம் (2) ஆறு (3) குளம் (4) வயல்

40.கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. இவற்றை ஒழுங்குபடுத்தினால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கு ஏற்ப பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க

(அ) இவ்வுண்மையை எல்லோரும் பின்பற்ற வேண்டும்

(ஆ) ஆனாலும் முயற்சியிருந்து விடுபடாமல் இறுதியில் வெற்றி பெற்றர்

(இ) தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழை எரியச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்

(ஈ) பல தடவைகள் மின்குமிழ் எரியவில்லை. தோல்வியடைந்தார்

(உ) தோல்வியே வெற்றிக்கான அடித்தளம் என்ற உண்மைய அவர் உலகிற்கு எடுத்துக் கூறினார்

(1) (உ), (அ), (ஆ), (இ), (ஈ) (2) (உ), (இ), (ஈ), (அ), (ஆ)

(3) (இ), (ஈ), (ஆ), (உ), (அ) (4) (இ), (ஈ), (உ), (அ), (ஆ)

(40 x 1 = 40 புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக்கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

நிலையறி பரீட்சை – 2021

தமிழ்மொழியும் இலக்கியமும்
தரம் 10

22	T	II

இரண்டு மணித்தியாலம்

கவனிக்க:

(1) **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.**

(2) **இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்**

01.பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடைதருக

I. பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு மீண்டும் திருத்தமாக எழுதுக.

அப்படி ஒரு கோப்பே இல்லை என்று ஒரே போடாகப் போட்டது.

II. பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.

மெலிந்தப் பிறைக்கும்

III. நாம் விரும்பும் வகையில் விண்ணை அடையலாம். இதில் இடம் பெறும் ஆகுபெயரை இனங்கண்டு அது எவ்வகை ஆகுபெயர் எனவும் குறிப்பிடுக.

IV. வாதத்திற்கென்று வந்திருந்தவர்களில் இருந்தவர்கள் இருந்தே விட்டார்கள். இங்கு இடம்பெறும் எழுவாய் பயனிலைகளைக் குறிப்படுக.

V. நாளை அவன் பாடசாலை வரமாட்டான் இங்கு இடம்பெறும் எதிர்மறை இடைநிலை யாது?

VI. உள் முகவரி, உடல், முடிப்பு, நன்றி, ஒப்பம், தலைப்பு, முகவரி தரப்பட்ட விடயங்களைக் கொண்டு தொழில் முறைக் கடிதத்தின் கட்டமைப்பை ஒழுங்குபடுத்தி தருக.

VII. மேகங் கறுப்பதால் மழைவரப் போகிறது

மின்னல் மின்னுவதால் மழைவரப் போகிறது

சாரல் அடிப்பதால் மழைவரப் போகிறது

இம் மூன்று வாக்கியங்களையும் இணைத்து தனியொரு வாக்கியமாகத் தருக.

VIII. திரை, திறை என்பன பொருள் தரும் வகையில் வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

IX. பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி மீண்டும் திருத்தமாக எழுதுக.

மேலே கிளம்பின பிறிற்றோ கட்சி கீழே இறங்கித் தரை மட்டத்திற்கு வந்து விட்டது.

X. திரிகூடராசப்பகவிராயப்பர் திருக்குற்றாலக் குறவஞ்சியை எழுதினார்.

இவ்வாக்கியத்தினை செயற்பாட்டு வினைவாக்கியமாக மாற்றி எழுதுக.

(20 புள்ளிகள்)

www.ikedu.lk

02.பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து. ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

I. மனித ஜீவராசிக்கு ஐம்பூதங்கள் அடிப்படையாகக் காணப்படினும் நீரின் அவசியம் எல்லாக் காலங்களிலும் அறிஞர்களால் முன்மொழியப்பட்டுள்ளன. மனித தேவைகளுக்குப் பயன்படும் நீர் எதிர்காலத்தில் குறைவடைந்து செல்லும் என கூறப்படுகின்றது. இன்று மனிதன் பல்வேறு தேவைகள் பொருட்டு நீரைஅநாவசியமாக விரையம் செய்கின்றான் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆனால், நீரைப் பெற்றுக் கொள்வதற்கான மாற்று வழிகளை அவன் அறியவில்லை. நீரைப் பேண வேண்டியதன் அவசியத்தை உணரவில்லை. எனவே, நீரைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஒரு விளக்கக் கட்டுரை எழுதுக

II. இளந்தலை முறையினர் தவறான வழியிலேயே செல்கின்றனர். அவர்களுக்கு முறையான வழிகாட்டல் இல்லை என்பது பலராலும் பேசப்படுகின்ற ஒரு விடயமாகும். இதற்குக் காரணம், தேவையான பருவங்களில் அன்பு, அறம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்துக்களை எடுத்துக் கூறுவதில்லை. இலக்கியங்கள் குறிப்பிடும் அறப்போதனைகளையேனும் இளைஞர்களிடத்திலே கொண்டு செல்வதில்லை. எனவே இக்கருத்துக்களை உள்ளடக்கி இளந்தலைமுறையிரை நல்வழிப்படுத்தும் வகையில் மேடைப்பேச்சு ஒன்று எழுதுக.

III. மனிதர்களிடையே வாசிப்பு என்பது மிகவும் குறைந்து விட்டது. வாசிப்பின் மூலம் பெறப்படும் பயன்களை இன்று வேறு வழிகளின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்பது கருத்து வாசிப்பிற்காக புத்தகங்களையோ அல்லது நூலகங்களையோ நாடும் போது ஏற்படும் சிரமங்கள், நேரமின்மை முதலிய காரணங்களால் மனிதன் தான் வாழும் சூழலில் இணையத்தளங்கள், கைத்தொலைபேசி, இலத்திரனியல் ஊடகங்கள் என்பவற்றின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் எனக் கருதும் ஒருவருக்கும் புத்தகவாசிப்பே மிகுந்த பயன் தரும் எனக் கருதும் இன்னொருவருக்கும் இடையில் அவற்றின் சாதகபாதகங்களை எடுத்துக் கூறும் வகையிலான உரையாடல் ஒன்று எழுதுக

IV. தந்தையை இழந்த சூழ்நிலையில் வெளிநாடு சென்ற தமேஸ், உலகினில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் மீண்டும் தன் சொந்த நாட்டிற்குத் திரும்பினான். தாய் நாட்டில் பொன் அதிசயங்கள் பலவற்றைக் கண்டான். பல்வேறு துறைகளும் உறுதுணையான நிலையில் விவசாயத்தின் மூலம் உயர் நிலையை அடைந்தான். அந்நிய தேசத்தை விட தன் நாடு மேலானதாக உணர்ந்தான் என்ற கருத்துப் புலப்பட ஒரு சிறுகதை எழுதுக

(25புள்ளிகள்)

www.ikeduk

03.**பின்வரும் பந்தியை வாசித்து அதன் பிரதான கருத்தை 40-45 சொற்களில் சுருக்கி எழுதுக**

மனிதன் இதுவரை எத்தனையோ அரிய காரியங்களைச் செய்து முடித்திருக்கின்றான். நீர்வளம் நிலவளம் மிகுந்து நாகரிகம் முதிர்ந்து மக்கள் இன்புற்று வாழ்ந்து வந்த அழகிய பெரிய நகரங்களையும் கணநேரத்தில் உயிரினங்களே வாழ முடியாத நாசபூமியாக அழியக் கூடிய அணுக்குண்டை இயற்றியிருக்கின்றான். எண்ணிறைந்த வகைகளில் இக்காலத்தில் பயனளித்துவரும் மின்சாரத்தையும் ரேடியோவையும் கண்டுபிடித்திருக்கின்றான். நாம் பிரயாணம் செய்யத்தக்க ரெயில், மோட்டார்கார் முதலிய தானியங்கி ஊர்திகளை அமைத்திருக்கின்றான். மணியொன்றுக்கு நூற்றுக்கணக்கான மைல் தூரம் வான் வழியாக நம்மைக் கொண்டு செல்லவல்ல ஆகாயவிமானங்களை சிருஷ்டித்திருக்கின்றான். எஞ்சினியரிங் துறையில் பெனாமாக்கால்வாய் முதலிய பிரமாண்டமான வேலைகளை இயற்றி முற்றுவித்திருக்கின்றான். சில மணிக்கூறுகளில் ஆயிரக்கணக்கான புஸ்தகங்களை வெளியிட்டு அறிவை உலகெங்கும் பரப்பிவரும் அச்சியந்திரங்களை உருவாக்கியிருக்கிறான்.

இவையெல்லாம் அற்புதமானசெயல்களாகும். ஆனால், இவற்றிற்கெல்லாம் மேலாக ஒரு அற்புதத்தையும் அவன் இயற்றியிருக்கின்றான். அது யாது என்றால் அவன் பேசக் கற்றுக்கொண்டதும், எழுதக் கற்றுக்கொண்டதும் தான். அவன் ஆதிமக்கள் நிலையில் இருந்து நாகரிக நிலையை அடைவதற்கு இவை இரண்டுந்தான் அதிமுக்கியமான காரணங்களாகும்.

(10புள்ளிகள்)

04. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்ளுக்கு விடை தருக

சிவகங்கைச்செகராசசேகரனால் பாடப்பெற்ற தட்சணகைலாசபுராணம் திருக்கோணேஸ்வரம் பற்றிய தலபுராணமாகும். சைவராசபண்டிதர் என்னும் குருவின் வேண்டுகோளுக்கு அமையச் செகராசசேகரமகாராசன் பாடினார். தலபுராணங்களில் இந்நூல் பழமையானவற்றுள் ஒன்று. திருக்கோணேஸ்வரம் பற்றிக் கிடைக்கின்ற இலங்கையில் எழுந்த நூல்களில் இதுவே புராதனமானது. ஆலயம் சிறப்புற்றிருந்த காலத்தில் இந்நூல் பாடப்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். மகாபுராணங்களிலே கூறப்படுகின்ற இந்துசமய தத்துவங்களையும் சைவசயமக் கருத்துக்களையும் தலச்சிறப்புப் பற்றிய செய்திகளையும் ஒருங்கிணைத்துக் கூறும் நூல் என்பதனால் சமய அறிவுக் களஞ்சியமாக இது விளங்குகின்றது. கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாசலபுராணம் முதலிய நூல்களிலும் இதிலே காணப்படும் செய்திகள் பல விரித்துரைக்கப்படுகின்றன. இந்நூலானது பாயிரம் தொடக்கம் ஏழு சருக்கங்களைக் கொண்டுள்ளது.

1. திருக்கோணேஸ்வரத்தின் சிறப்புப் பற்றி எடுத்துக் கூறியவர் யார்?
2. சிவகங்கைச்செகராசசேகரனின் குரு யார்?
3. மகாபுராணங்களிலே கூறப்பட்ட சிறப்புக்கள் எவை?
4. தட்சணகைலாசபுராணத்தின் சிறப்பு யாது?
5. இப்பந்தியில் கூறப்பட்டுள்ள ஏனைய நுல்கள் இரண்டு தருக?

(10புள்ளிகள்)

www.ikeou.lk

05. இன்று நூலக வாசிப்பு அருகி வருகின்ற சூழலில் அதனை மீட்டெடுக்கும் பொருட்டு நீர் வசிக்கும் கிராமத்தில் பயன்பாடற்றுக் கிடக்கும் நூல் நிலையம் ஒன்றினை மீள்பயன்பாட்டிக்காக அதனை புனரமைப்பு செய்து தருமாறு கோரி உமது பிரதேசசெயலருக்கு 100 சொற்களில் அமையுமாறு

கடிதம் எழுதுக

அல்லது

இன்று உலகையே உலுக்கி வரும் கொடிய கொரோனா வைரஸ் நோயானது பல்வேறு வகையில் மக்களிடையே பாரிய பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றது. இதனை கட்டுப்படுத்த மக்களுக்குரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது இன்றியமையாததாகும். இதனை வலியுறுத்தி 100 சொற்களில் அமையுமாறு துண்டுப்பிரசுரம் எழுதுக

(15புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக்கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

நிலையறி பரீட்சை – 2021

தமிழ்மொழியும் இலக்கியமும்
தரம் 10

22	T	III

இரண்டு மணித்தியாலம்

கவனிக்க:
அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

01.பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக

I.“எட்டுணையானும் இரவாது தான் ஈதல் எத்துணையும் ஆற்றல் இனிது”

(அ) இங்கு இரவாது என்பது குறிக்கும் பொருள் யாது?
(ஆ) ‘எத்துணை’ என்பதால் கருதிக்கொள்வது யாது?

II. “கூனல் இளம் பிறை முடித்த வேணியலங்காரர் குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே”

(அ) வேணியலங்காரர் எனக் குறிப்பிடப்பட்டவர் யார்?
(ஆ) ‘எங்கள் மலையே’ என்பதில் எங்கள் என்போர் யார்?

III.“கதிகள் யாவவும் திருமென லோர்ந்திடார் கண்ணில்லாதவர் போலத் திகைப்பார்”

(அ) கதிகள் என்றால் என்ன?
(ஆ) திகைப்பவர் யாருக்கு ஒப்பிடப்பட்டுள்ளது?

iv.“தொலைக்காட்சி காதாநாயகியின் தொப்புள் பிரதேசத்தில் மெய்மறந்து இருந்த நான் திரும்பி மகனுடைய கம்பியூட்டர் திரையைப் பார்த்து திகைத்தேன்”

(அ) இங்கு மகன் எனச்சுட்டப்படுவது யாரை?
(ஆ) இங்கு இடம்பெறும் இரண்டு கலைச் சொற்களையும் தருக?

V.“நாவலர் அவர்களின் தமையனார் புத்திரரும் அவர்கள் சரித்திரத்தை எழுதியுள்ளவர்களும் என் ஆசிரியருமாயுள்ளவர்”
(அ) சரித்திரம் என்றால் என்ன?
(ஆ) ஆசிரியர் எனக் குறிப்பிடப்படுவது யாரை?
Vi“பெரியோரெல்லாம் பெரியோருமல்லர் சிறியோரெல்லாம் சிறியருமல்லர்”

(அ) பெரியோருமல்லர் என்பதால் கூறப்படுவது யாது?
(ஆ) இக்கூற்றை வலியுறுத்துபவர் யார்?

www.lkedu.lk

vii. " வெங்கட் பிறைக்கும் கரும் பிறைக்கும் மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே"

(அ) பிறைச்சந்திரனின் இயல்பு யாது?
(ஆ) விழிவேல் என்பது எவ்வகை அணி?

viii."தமது அந்தரங்க நண்பர்கள் மூலம் நாவலர் அவர்களுக்குத் தாமே நேரிற் சில கடிதங்களில் தந்திகளில் ஒருவாறு குறிப்பிட்டும் இருந்தார்"

(அ) அந்தரங்கம் என்றால் என்ன?
(ஆ) தாமே எனக் குறிப்பது யாரை?

ix. "நாத மூன்றுரு வான குற்றலா நாத ராரிய நாடெங்கள் நாடே"

(அ) 'நாதம்' எனக்குறிப்பிடப்படுவது யாது?
(ஆ) மூன்றுரு என்பதுள் அடங்குவோர் யார்?

(20 புள்ளிகள்)

02.பின்வரும் செய்யுட் பகுதியையும் உரைநடைப்பகுதியையும் வாசித்து அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

i.உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம்போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண் டதுமா ளிகை

(அ) இவ்வுலகில் உள்ளோர் எவ்வாறானவர்கள்?
(ஆ) இங்கு இடம்பெறும் நீதிக்கருத்துக்களை எடுத்துரைக்குக?

ii. சூழு மாய வுலகினிற் காணுறுந்
தோற்றம் யாவையும் மானத மாகுமால்
சூழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்
அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்
தாழு முள்ளத்தர் சோர் வினர், ஆடுபோல்
தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்,
வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்
விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே

(அ) இந்த உலகம் எப்படிப்பட்டதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது?
(ஆ) பலபொருள் நாடுவோரின் இயல்பு எத்தகையது?

www.lkedu.lk

iii. ஓர் தட்டிலேபொன்னும் ஓர் தட்டிலேநெல்லும் ஒக்கவிக்கும்
கார் தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப் பேர்
ஆர்தட் டினும்தட்டு வாராமலே அன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே

(அ) கொடிய பஞ்ச காலம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?
(ஆ) சீதக்காதியின் கொடைத்திறம் எத்தகையது?

iv. பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு என்று சொல்லுகின்ற 'பிறகு' அந்த சபையில் அமைதி நிலவியது. பேச்சு மூச்சு ஒன்றுமில்லை. மேலே கிளம்பின பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்ல கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்து விட்டார்கள். தபால் தந்திக் கட்டுக்கள் நாவலர் அவர்களின் முன்னிலைக்கு வந்து சேர்ந்தன. " ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டங் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம் " என்றார் நாவலர் அவர்கள்.

(அ) பிரசண்ட மாருதம் என்பதன் பொருள் யாது?
(ஆ) பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்ல கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்து விட்டதன் காரணம் யாது?

v. மறுபடியும் நான் அந்தக் கடைக்கு கம்பியூட்டரை கொத்துக்கொத்தாக ஆராய்ச்சி செய்து வித்துவான் பட்டம் பெற்ற ஒரு நண்பரோடு படையெடுத்தேன். நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர். விடுவாரா? இப்போது வட்டியும் முதலுமாக அவர்களைப் போட்டு குடை குடை என்று குடைந்தார். அவர்களுடையய சம்பாஷணை முற்றிலும் ஒரு புதிய பாஷையில் நடைபெற்றது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இரண்டு பேருடைய வாயையும் மாறி மாறிப் பார்த்தேன். ஹார்ட் ட்ரைவ், ப்ளொப்பி, மெகா பைட், சொப்ட்வேர், இன்டர்பேஸ், யூபிஎஸ் என்ற வார்த்தைகள் எல்லாம் எனக்கு சிதம்பர சக்கரமாக இருந்தன

அ) நண்பரின் சிறப்புக்களாகக் கூறப்பட்டவற்றைத் தருக?
ஆ) சிதம்பர சக்கரம் என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(20 புள்ளிகள்)

www.ikedu.lk

3. நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்

(அ) நாவலரின் வாதத்திறன்

(ஆ) பண்டிதமணியின் படைப்பாற்றல்

ஆகியன வெளிப்படுத்தப்படும் வகையினை விளக்குக.

அல்லது

பாரதியார் சுயசரிதையில்

(அ) பெண்ணை எதிர்பார்த்துக் காத்திருந்த பாரதியின் நிலை

(ஆ) அப்பகுயில் இடம்பெற்றுள்ள அணிப்பயன்பாடு

ஆகியன புலப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக

(15 புள்ளிகள்)

4.கம்பியூட்டர் என்ற சிறுகதையில்,

(அ) கம்பியூட்டர் பற்றிய வர்ணனைகள்

(ஆ) குடும்பத்தில் ஏற்பட்ட மகிழ்வு

ஆகியன விபரிக்கப்படும் வகையினை விளக்குக

அல்லது

திருக்குற்றாலக்குறவஞ்சியில்

(அ) திருக்குற்றாலமலையின் சிறப்பு

(ஆ) உயர்வுநவிற்சி அணிப்பிரயோகம்

என்பனவற்றைச் சான்றாதாரங்களுடன் விளக்குக

(15புள்ளிகள்)

- **5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக**

5. **தண்டாமரையினுடன் பிறந்தும்** என்ற நீதிப்பாடலில்

(அ) அறிவுடையோர் இயல்பு

(ஆ) அறிவற்றோர் இயல்பு

ஆகியனவற்றினை விளக்குக

(10புள்ளிகள்)

6. **பங்கப்பழனத்து உழும் உழவர்** என்ற பாடலில்

(அ) சோழ நாட்டின் வளச்சிறப்பு

(ஆ) சோழ மன்னனின் பெருமை

என்பவற்றினை விளக்குக.

(10புள்ளிகள்)

7.**தனிப்பாடல்**களில்

(அ) காளமேகப் புலவரின் கவிச் செருக்கு

(ஆ) எள்ளுக்கும், பாம்புக்கும் இடையேயான சிலேடை

என்பன வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

(10புள்ளிகள்)

www.lkedu.lk